# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண் 34/2020

பெயர்: பாப்பு நாள் : 06.08.2022

வா.சா.1 – 2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – பாப்பு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனது தகப்பனார் பெயர் ரங்கையகவுண்டர் ஆவார். எனது தாயார் பெயர் மாராயி ஆகும். எனது தாயார் ரங்கையகவுண்டருக்கு முதல் மனைவி ஆவார். ரங்கையகவுண்டருக்கும் மாராயிக்கும் நான் மற்றும் முதல் வாதி வாரிசுகள் ஆவோம். எனது தகப்பனார் ரங்கையகவுண்டருக்கு ராஜம்மாள் என்ற இரண்டாவது மனைவி என்றால், சரிதான். ரங்கையகவுண்டர் மற்றும் ராஜம்மாளுக்கு 1, 2 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றால், சரிதான். முதல் பிரதிவாதிக்கு சங்கீதா என்ற ஒரு பெண் பிள்ளை உள்ளது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் மனைவி தற்போது உயிருடன் இல்லை என்றால், சரிதான். சங்கீதாவை 2, 3 பிரதிவாதிகள் பராமரித்து வருகிறார்கள் என்றால், சரிதான். எனது தாயார் கடந்த 04.12.2012ம் தேதி அன்று இறந்துவிட்டார் என்றால், சரிதான். எனது தகப்பனார் 02.04.2013 அன்று இறந்துவிட்டார் என்றால், எனது தாயார் இறந்து 4, 5 மாதங்கள் கழித்து இறந்துவிட்டார். எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு ஞாபமில்லை, ஆனால் அதை வாங்கியுள்ளேன். எனது தாயார் வா.சா.ஆ.1 ஆவணப்படி ஒரு பெருமாள்கவுண்டரிடமிருந்த கடந்த 02.02.1980ம் தேதி 2 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றார் என்றால், சரிதான். அதே தேதியில் எனது தகப்பனார் ரங்கையகவுண்டர், 1ம் பிரதிவாதியை மைனராக காண்பித்து சர்வே எண் 288ல் 1 ஏக்கர் 88 செண்டை பெருமாள்கவுண்டருக்கு கிரையம் கொடுத்தார் என்றால், சரிதான். பெருமாள்கவுண்டர் எனது தகப்பனாருக்கு பங்காளி முறை ஆவார். ஒரே தேதியில் கிரையம் ஏற்பட்ட பத்திரங்கள் ஒரு பரிவர்த்தனை கிரையங்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக 10 ஏக்கர் நிலத்திற்கு மேல் நிலம் இருந்து வருகிறது. அந்த சொத்துக்களில் 2 ஏக்கர் நிலம் எனது தாயார் வாங்கியது. மீதமுள்ள சொத்துக்கள் எனது தகப்பனார் வாங்கியது. எனது தகப்பனார் 6 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு முன்பாகவே அவருக்கு பூர்வீகமாக சுமார் 6 ஏக்கர் நிலம் இருந்தது. எனது தகப்பனார் விவசாயத்தொழில் தான் செய்து வந்தார். எனது தாயாரும் எனது தகப்பனாருக்கு

உதவியாக விவசாயத்தொழில்தான் செய்து வந்தார். எனது தகப்பனாரின் பூர்வீக சொத்து சம்பந்தமாக இதுவரை எந்த பாகப்பிரிவினை நடைபெறவில்லை. எனது தாயார் அவரது சுய சம்பாதியத்தின் மூலம் வழக்கு சொத்தை வாங்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனார் இரண்டாம் திருமணம் செய்து கொண்டதால், எனது அம்மாவிற்கு அவருடைய தாயார் வழக்கு சொத்தை வாங்கி கொடுத்தார். வழக்கு சொத்தானது எனது தாயார் பெயரில் வாங்கப்பட்டு இருந்தாலும், அது என் தகப்பனார் பரிவர்த்தனை செய்து கொண்ட சொத்துதான் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாரும் தாயாரும் அவர்கள் உயிருடன் இருந்தவரை ஒன்றாகத்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால், சரிதான். ஆனால் எனது தாயாருக்கு சொந்தமான காட்டை எனது தாயார் மட்டுமே உழவடை செய்து வந்தார். வழக்கு சொத்து சம்பந்தமான பட்டாவில் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்றால், பட்டாவில் பிரதிவாதிகள் பெயர் எவ்வாறு சேர்க்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நானும் எனது அக்காள் செல்லம்மாளும் சேர்ந்து வா.சா.ஆ.2 ஆவணப்படி ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் 1, 2 பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கோடு ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் இதுநாள் வரை நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்பதால், ரத்து செய்யப்படவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் கூட்டு உரிமைதாரர்கள் என்பதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நானும், செல்லம்மாளும் சுமார் 2 வருடத்திற்கு முன்பாக வாய்மொழியாக கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டோம். அது ரூ.20 லட்சத்திற்கு ஏற்படுத்தப்பட்டதாகும். மூன்று மாத காலத்திற்குள் கிரையம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளோம். ஆனால் இன்றைய தேதி வரை கிரையம் ஏற்படவில்லை என்றால், சரிதான். பிரதிவாதிகள் 03.07.2020 ம் தேதியன்று அத்துமீறி வழக்கு சொத்தில் நுழைந்தார்கள் என்பது பொய் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகள் குறைந்த விலைக்கு வழக்கு சொத்தை கேட்டதாக நான் கூறியிருப்பது பொய் என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் வாங்கிய சொத்தில், அவர் இறந்த பிறகு எனது தகப்பனாருக்கு மூன்றில் ஒரு பாகம் சென்றுவிட்டது என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு சென்ற மூன்றில் ஒரு பாகத்தில், பிரதிவாதிகளுக்கு பங்கு உண்டு என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கு விளம்புகை பரிகாரம் கோராமல், வெறும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால், நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்ககில் 1, 2 வாதிகளுக்கு தனித்தனியாக சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால், 1, 2 வாதிகள் தனித்தனியாக நீதிமன்ற கட்டணம் செலுத்த

கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால், சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்து விபரம் தவறு என்றாலும், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும், சரியல்ல.

ஒப்பம் / பாப்பு

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.